இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 57 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 21 – செவ்வாய்க்கிழமை 07 அக்டோபர் 2025 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 57: Thiruvalluvar Year - 2056 - Purataasi 21- Tuesday 07 October 2025 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## ஆணவத் திமிருக்கு எதிராகவும்;

# ஜனநாயக விரோதிகளுக்கு எதிராகவும் போராடும்!

## ‘தமிழ்நாடு யாருடன் போராடும்’ எனக் கேட்ட ஆளுநருக்கு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பதில்!

**சென்னை, அக்.7-**

**தமிழ்நாடு ஆளுநர், ‘தமிழ்நாடு யாருடன் போராடும்?’ எனக் கேட்டிருந்தார். அதற்கு பதிலளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2025) வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், ‘ஒன்றிய அரசின் ஆணவத் திமிருக்கு எதிராகவும், ஜனநாயக விரோதிகளுக்கு எதிராகவும் தமிழ்நாடு போராடும்’ என்று குறிப்பிட்டுள்ளார்.**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

“தமிழ்நாடு யாருடன் போராடும்?” என ஆளுநர் கேட்டுள்ளார்...

இந்தி மொழியை ஏற்றுக்கொண்டால் தான், கல்வி நிதியைக் கொடுப்போம் என இருக்கும் ஆணவத் திமிருக்கு எதிராகப் போராடும்!

அறிவியல் மனப்பான்மையை விதைக்கும் கல்வி நிலையங்களுக்குள் சென்று மூடநம்பிக்கைகளையும் - புரட்டுக் கதைகளையும் சொல்லி, இளம் தலைமுறையை நூறாண்டு பின்னோக்கி இழுக்கும் சதிக்கு எதிராகப் போராடும்!



உச்சி மண்டை வரை மதவெறியை ஏற்றிக்கொண்டு, எதற்கெடுத்தாலும் மதத்தைப் பிடித்துக் கொண்டு நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் தந்திரக் கும்பல்கள் தலையெடுக்காமல் போராடும்!

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை, மக்களின் விருப்பத்திற்கு மாறாக நெருக்கும் ஜனநாயக விரோதிகளுக்கு எதிராகப் போராடும்!

ஆளுநரின் அதிகார அத்துமீறல்களுக்கு எதிராக ஒவ்வொரு முறையும் நீதிமன்றத்துக்குச் சென்று மாநில உரிமைகளை நிலைநாட்டுகிறோம். அரசியல் சட்டத்தின் மாண்பை சிறுமைப்படுத்தும் எண்ணம் கொண்டவர்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடும்!

தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய தொழிற்சாலைகளை - தொழில் வளர்ச்சியை - வேலைவாய்ப்புகளை, அடுத்த மாநிலத்துக்கு மிரட்டி அழைத்துச் செல்லும் சதிகாரர்களுக்கு எதிராகப் போராடும்!

ஆர்.எஸ்.எஸ். ஆசியுடன் இந்திய மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைத்து மீண்டும் மனுதர்மத்தை நிலைநாட்டத் துடிக்கும் ஆதிக்க வெறியர்களுக்கு எதிராகப் போராடும்!

உலகத்துக்கே பொதுவான வள்ளுவருக்குக் காவிக்கறை பூசுவது முதல் கீழடியின் உண்மைகள் நிலத்துக்கடியிலேயே புதைந்துபோக வேண்டும் என்று நினைப்பது வரையிலான வன்மம் இருக்கிறதே, அதற்கு எதிராகப் போராடும்!

தொகுதி வரையறை மூலம் தமிழ்நாட்டின் வலிமையைக் குறைக்கும் சதிக்கு எதிராகப் போராடும்!

ஏகலைவனின் கட்டை விரலைக் கேட்டதுபோல் திணித்திருக்கும் நீட் எனும் பலிபீடத்துக்கு எதிராகப் போராடும்!

நாட்டையே நாசப்படுத்தினாலும், தமிழ்நாடு மட்டும் 11.19% வளர்ச்சி பெற்று, பிற மாநிலங்களுக்கு ஒளிகாட்டுகிறதே என்று நாள்தோறும் அவதூறுகளைப் பரப்பி, கலவரம் நடக்காதா என ஏங்கிக்கிடக்கும் நரிகளுக்கு எதிராகப் போராடும்!

நாகாலாந்து மக்கள் புறக்கணித்து அனுப்பிய பின்னும் திருந்தாமல், தமிழ்நாட்டு மக்களிடையே குழப்பத்தை உண்டாக்க மட்டுமே பணியாற்றும் ஆளுநருக்கு எதிராகவும் போராடும்!

> **“உலகத்துக்கே பொதுவான வள்ளுவருக்குக் காவிக்கறை பூசுவது முதல் கீழடியின் உண்மைகள் நிலத்துக்கடியிலேயே புதைந்துபோக வேண்டும் என்று நினைப்பது வரையிலான வன்மம் இருக்கிறதே, அதற்கு எதிராகப் போராடும்!”**

இறுதியில் தமிழ்நாடே வெல்லும்! ஒட்டுமொத்த இந்தியாவையும் காக்கும்!

**தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அப்பதிவில் பதிவிட்டுள்ளார்.

---

## ஆழ்வார்பேட்டையில்

# மழைநீர் வடிகால் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திடீர் ஆய்வு!

சென்னை, அக்.7-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2025) பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் டி.டி.கே. சாலை - வீனஸ் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் கழிவுநீர் விரிவாக்கப் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

**ஆழ்வார்பேட்டை - டி.டி.கே. சாலையில் புதிய குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணிகள்**

தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-118, டி.டி.கே சாலை ஆழ்வார்பேட்டையில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், மழைநீர் வடிகால் பணிகள் நடைபெற்று வரும் இடத்தில், சென்னை குடிநீர் வாரியத்தால் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள குடிநீர் குழாய்களை மாற்றி,

200 மீட்டர் நீளத்திற்கு, புதிய குடிநீர் குழாய்கள் அமைக்கும் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

**வீனஸ் காலனியில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் மழை நீர் வடிகால் பணிகளை பார்வையிட்டு ஆய்வு**

வீனஸ் காலனி 1வது தெரு. 2வது தெரு, சீமான் சீனிவாசன் தெரு, வரதராஜபுரம் பிரதான சாலை, கஸ்தூரி எஸ்டேட் 1வது தெரு, சேஷாத்திரி தெரு மற்றும் முரேஷ் கேட் சாலை ஆகிய தெருக்களில் மழைக்காலங்களில் தண்ணீர் தேக்கம் ஏற்படுகிறது.

மேற்குறிப்பிட்ட தெருக்களில், மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கா வண்ணம், ஜெயம்மாள் சாலை, இளங்கோ சாலை குறுக்கு தெரு, இளங்கோ சாலை, போயஸ் ரோடு, வெங்கடரத்தினம் சாலை, ராஜ கிருஷ்ணா ரோடு, நல்லான் போயஸ் ரோடு, வரதராஜபுரம் பிரதான சாலை, ஸ்ரீமான் ஸ்ரீனிவாசன் ரோடு மற்றும் டிடிகே சாலை ஆகிய பத்து தெருக்களில் மழை நீர் வடிகால்கள் சுமார் 2.16 கிமீ நீளத்திற்கு 8.21 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

எதிர்வரும் பருவமழையையொட்டி, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார். மேலும், பணிகளை மிக விரைந்து முடித்திட வேண்டும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேற்கண்ட மழை நீர் வடிகால்வாய் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தேங்கும் மழை நீரை எல்டம்ஸ் சாலை, சிபி ராமசாமி சாலை, லஸ் சர்ச் சாலை மற்றும் சி.ஐ.டி காலனி ஆகிய நான்கு வழியாக வெளியேற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்போது, அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் மரு.எழிலன், நே.சிற்றரசு, ஆணையர் ஜெ.குமரகுருபரன், டி.ஜி. வினய், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.10.2025) டி.டி.கே. சாலை வீனஸ் காலனியில், சென்னை மாநகராட்சி சார்பில் 2.16 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டுவரும் மழை நீர் வடிகால்வாய் பணிகள் மற்றும் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் 1.5 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்கள் விரிவாக்க பணிகளையும் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் மரு. எழிலன், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

## கரூர் கொடுந்துயரம்:

# சிறப்பு புலனாய்வுக்குழு விசாரணையைத் தொடங்கியது!

*கரூர், அக்.7-*

*கரூர் துயரச் சம்பவம் தொடர்பாக ஐஜி அஸ்ரா கார்க் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு புலனாய்வு குழுவினர் விசாரணையை தொடங்கி உள்ளனர்.*

*கரூரில் கடந்த மாதம் 27ம் தேதி நடிகர் விஜய் பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இந்த துயர சம்பவம் நாட்டையே உலுக்கியது. இதையடுத்து இந்த சம்பவம் தொடர்பாக விசாரித்து அறிக்கை அளிக்க ஓய்வுபெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் ஆணையத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அமைத்துள்ளார். அதன்படி நீதிபதி அருணா ஜெகதீசன் கரூரில் 2 நாள் முகாமிட்டு விசாரணை நடத்தினார்.*

*இதனிடையே இந்த வழக்கின் விசாரணை அதிகாரியாக ஏ.டி.எஸ்.பி. பிரேமானந்த் நியமிக்கப்பட்டார். சம்பவம் தொடர்பாக கரூர் மாவட்ட தவெக நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் கரூர் சம்பவம் தொடர்பான வழக்குகளை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், கரூர் சம்பவம் தொடர்பாக விசாரிக்க வடக்கு மண்டல ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்து உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து கரூர் விசாரணை அதிகாரியாக ஏற்கனவே நியமிக்கப்பட்டு இருந்த ஏ.டி.எஸ்.பி. பிரேமானந்த் விசாரணை ஆவணங்களை சிறப்பு விசாரணைக் குழுவிடம் ஒப்படைத்தார்.*

*இந்நிலையில், அஸ்ரா கார்க் தலைமையிலான குழுவினர் விசாரணையை தொடங்கி உள்ளனர்.*

*இந்த சிறப்பு புலனாய்வு குழுவில் நாமக்கல் மாவட்ட எஸ்.பி. விமலா, சி.பி.சி.ஐ.டி. எஸ்.பி. சியாமளா தேவி ஆகிய 2 பெண் அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர். மேலும், 3 ஏ.டி.எஸ்.பி.க்கள், டி.எஸ்.பி.க்கள், ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் இந்த குழுவில் உள்ளனர்.*

---

# அருட்பிரகாச வள்ளலார் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, அக்.6-

அருட்பிரகாச வள்ளலார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-



**“வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்” என, பசியற்ற மனிதர்களைக் காணும் கருணை நிரம்பிய அருட்பிரகாச வள்ளலார் அவர்களின் பிறந்த நாளான இந்த தனிப்பெருங்கருணை நாளில், அவர் கூறிய “மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும்” என்ற உயர்ந்த நிலை அனைத்து உள்ளங்களிலும் நிலை நிற்கட்டும்!**

இவ்வாறு முதல்வர் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.